காலைமணி.காம்




KALYAN
JEWELLERS

# ஸூம் தளத்தில் டாக்குமென்ட் அம்சம் அறிமுகம்

ஸூம் வீடியோ கம்யூனிகேஷன் தளத்தில் டாக்குமென்ட் அம்சத்தை அறிமுகம் செய்துள்ளது அந்நிறுவனம். அண்மையில் நடைபெற்ற அந்நிறுவனத்தின் ஆண்டு விழா நிகழ்வில் இது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சான் ஜோஸில் இதன் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது. கரோனா பரவலின்போது உலக அளவில் ஸூம் தளம் பயன்படுத்தப்பட்டது. அலுவலகம், பள்ளி, கல்லூரி என பெரும்பாலான இடங்களில் ஸூம் சேவை அவசியமானதாக அமைந்தது.

இத்தகைய சூழலில் ஸூம் தளத்தின் சேவைகளை விரிவு செய்யும் வகையில் ஸூம் டாக்ஸ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஸூமின் ஏஐ கம்பேனியனை ஒருங்கிணைக்கும் வகையில் இது அமைந்துள்ளது. இது கூகுள் வொர்க் ஸ்பேஸ் மற்றும் மைக்ரோசாஃப்ட் 365-க்கு மாற்றாக இருக்கும் என சொல்லப்படுகிறது.